● பூட்டான், நேபாளம், இந்தியா முழுப்பங்களிப்பில்லை

# சார்க் உச்சிமாநாடு நாளை கொழும்பில் ஆரம்பமாவது சந்தேகமே! பி. பி. ஸி. தகவல்

ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் பலத்த ஆரவாரத்துடன் மூன்று தினங்கள் நடைபெற பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த 'சார்க்' மாநாடு நாளை நடைபெறுமா என்ற வினா தற்போது எழுந்துள்ளது. இது பற்றிய செய்தியினை பி. பி. ஸி. நேற்று வெளியிட்டது. பூட்டான் மன்னர் கலந்து கொள்ளமாட்டார் என்பது இப்போதுஊர் ஜிதமாகி விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தான் நாட்டை விட்டு வெளியேறினால் உள் நாட்டு அரசியல் குழப்பம் ஏற்படலாம் என அவர் அச்சமுறுவதாக முன்னர் காரணம் கூறப்பட்டது, எனினும் அவர் இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை முற்றாக மறுப்பதற்கில்லை என ஸ்ரீலங்கா அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டு வந்தது. இப்போது நேபாளமும் தன் புறக்கணிப்பை புலப்படுத்தி விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது. பிரதமர் திரு கொய்ராலாவும் தனது கொழும்புப் பயணத்தைப் பின்போட்டுள்ளதாகப் பி. பி. ஸி,

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 297 பிரசோற்பத்தி கார்த்திகை 20 ( 06 - 11 - 1991 ) புதன்

# பொருளாதார நெருக்குதல் சமாதானத்துக்கு பாதகமாகும்

## அமைச்சர் தொண்டமானுக்கு புலிகள் பதில் கடிதம்

இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசு தமிழ் மக்கள் மீது நெருக்குதல் தொடுத்து வரும் நிலை சமாதானப் பேச்சுக்கு பாதகமாகவே அமையும்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்கு தற்போது அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தின் விவரம் வருமாறு:-

திரு எஸ். தொண்டமான்,
உல்லாசப் பிரயாண, கிராமிய தொழிற்துறை அமைச்சர்,
கொழும்பு.

அன்புடையீர்,

உங்களது 26.09 1991திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. இங்கு நிலவும் போர் சூழ்நிலை காரணமாக உடன் பதில் எழுத முடியவில்லை

'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் கொழும்பில் உங்களுடன் கலந்தாலோசனை நடாத்திவிட்டு யாழ்ப்பாணம் வருகைதந்தபொழுது அவர்களைச்சந்தித்துஎமது நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியிருந்தோம். அவர்கள் எமது கருத்துகளை உங்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்களோ தெரியவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்க

—04 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பங்களுக்கான மேலதிக சீனி விநியோகம்

குடும்பங்களுக்கு மேலதிகமாகச் சீனி வழங்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பது குறித்து செயலகத்திலிருந்து செயற்திட்டப் பணிப்பாளர் அறிவுறுத்தல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்

அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

பங்கீட்டுக்கு மேலதிகமாக குடும்பங்களுக்கு சீனி தேவையென பலர் கோரியதை அடுத்து தற்பொழுது கொம்படி மூலமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை சீனி ஒரு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நூலகம் எரிப்புக்கு காமினி திஸநாயக்கா மறுப்பு

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்துக்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா மறுத்துள்ளார். 1981ஆம்ஆண்டுஅபிவிருத்திச் சபைத்தேர்தல் நேரம் யாழ் பொது நூலகத்தில் உள்ள 94 ஆயிரம் புத்தகங்கள் எரிக்கப்பட்டதற்கு தானே காரணம் என அமிர்தலிங்கம் கூறியதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதை மறுத்துள்ள அவர் அமிர்தலிங்கம் அவ்வாறு கூறியிருக்க மாட்டார் என்றும் சொன்னார்.

## கருவாட்டுச் சிப்பங்கள் கடலில் படகுடன் மூழ்கின

மன்னார் - குதிரைமுனைப் பகுதியில் படகு ஒன்று கடலில் கற்பாறையுடன் மோதியதால் அதில் கொண்டுவரப்பட்ட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான அறுபது கருவாட்டுச் சிப்பங்கள் நீரில் மூழ்கின.

இந்தப்படகு தலைமன்னார் பகுதியில் இருந்து மன்னாருக்கு வந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகில் வந்தவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனராம் 08

## தீபாவளியன்று வாள்வெட்டு

தீபாவளித் திருநாள் நேற்று குடாநாட்டில் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது

அதேசமயம் சில அசம்பாவிதசம்பவங்களும் நிகழாமலில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாவற்குழிப்பகுதியில் வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றும் நிகழ்ந்துள்ளது மதுபோதையில் நின்றவருக்கும் அயல் வீட்டுக்காரருக்கும் இடையே உண்டானவாக்குவாதத்தின் போது மதுபோதையில் நின்றவர் வயோதிபர் ஒருவரை வாளால் வெட்டியதாகவும் அவர் படுகாயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது. 7,15

## விவசாயிகளுக்குச் சகாய விலையில் உரவகை

யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் உள்ள விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையத்தினர் உற்பத்திக் குழுக்கள் ஊடாக உர வகைகளைச் சகாய விலையில் வழங்கி வருகின்றனர்.

கிராம சேவை அலுவலர்கள் பிரிவு தோறும் இயங்கும் உற்பத்திக் குழுக்களில் விவ

—04 ஆம் பக்கம் பார்க்க

மண்டைதீவில் தமக்கு மீன்பிடிக்க

## இரு இளைஞரைப் பிடித்து பயன்படுத்துகிறதாம் இராணுவம்

கடந்தவாரம் மீன்பிடிப்பதற்காக மண்டைதீவுக் கடலுக்கு சென்றிருந்த இரு இளைஞர்களை அங்கு நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பிடித்து வைத்துஅவர்களைக் கொண்டு

—04 ஆம் பக்கம் பார்க்க

## மலையக குண்டுவெடிப்புக்கு ஐ.தே.க உதவியாளரே காரணம்

மலையகத்தில் நடைபெற்ற அதிருப்தியாளர் குழுவின் கூட்டத்தில் குண்டுத் தாக்குதல் நடாத்தியவர் உள்ளூர் ஐ தே க அரசியல் வாதியின் உதவியாளர் என கண்டறியப்பட்டதாக பி பி ஸி. தெரிவித்தது எனினும் அவர் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை

அதிருப்தியாளர் தமக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் மீனவரின் படகுகள் இராணுவத்தின் பாவனையில்

அல்லைப்பிட்டியில் குருநகர் மீனவர்கள் பாவித்த பல மீன்பிடி வள்ளங்களை அங்குள்ள இராணுவத்தினர் தமது பாவனைக்கு எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்முனைக்கு அருகில் இருந்த சில மீனவரின் இயந்திரப்படகுகளையும் படையினர் கைப்பற்றி இரவு நேரங்களில் சிறுத்தீவுகளினூடாக கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் சென்றுவருவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (15)

## லக்ஷ்மனுக்கு எதிராக ஐ. தே. க. நடவடிக்கை

ஐ தே. க. எம். பியான லக்ஷ்மன் செனிவரட்னவுக்கு எதிராக, கட்சி ஒழுக்க நெறியை மீறினார் என்ற குற்றச்சாட்டு மனு ஒன்றை கொண்டுவர அரசு முயல்வதாக அதிருப்தி குழுவின் தலைவரான லலித் அத்துலத் முதலி குற்றஞ்சாட்டியுள்ளார்

செய்தியாளரிடம் பேசிய லலித் லக்ஷ்மன் செனிவரட்ன ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் கையெழுத்திட்டவர் என்பதையும் அ.போது சுட்டிக் காட்டினார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோகம் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறையும் காலபோகச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், உரம் போன்வற்றுக்கு தடை விதிக்கப்பட்டதால் தாம் விவசாயத்தை மேற்கொள்ள முடியவில்லை என பல விவசாயிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் இருந்து பல விவசாயக் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளமையும் மற்றொரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 08

# செய்தி உலகம்

## இந்திய சாதனைக்கு தனிப்பதிவு

கின்னஸ் புத்தகத்தைப் போல் இந்தியாவில் மட்டும் நாட்டப்படும் சாதனைகளைத் தொகுத்து 'லிம்காலிக்கார்ட்ஸ் ஒப் இந்தியா' என்ற பெயரில் டில்லியில் வருடா வருடம் புத்தகம் வெளியிடப்படுகின்றது.

## பிராணிகளுக்காக அம்புலன்ஸ் சேவை

25 வருடங்களுக்கு முன் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட புரோகிரெஸ் ஒப் இந்தியா என்ற நிறுவனம் ஆதரவற்ற மிருகங்களுக்கு சிகிச்சையளித்து வருகிறது

வீதியோரங்களில் விபத்துக்குள்ளாகியும் நோயுடனும் போராடும் பிராணிகளுக்கு இந்நிலையம் இலவச சிகிச்சையை அளித்து வருகிறது அத்துடன் அவற்றுக்கு கருத்தடை சிகிச்சையையும் அளித்து வருகின்றது.

இந்நிலையம் பிராணிகளைக் காப்பாற்றும் பொருட்டு அம்புலன்ஸ் சேவை ஒன்றையும் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் இரவுக் கொள்ளை

பிரான்சில் இரவுநேரங்களில் புகைவண்டிக் கொள்ளைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன கொள்ளையர்கள் ரயிலில் மயக்க மருந்துக்களின் உதவியுடன் விலையுயர்ந்த பொருள்களைக் கொள்ளையிட்டுச் செல்கின்றனர்

இதனால் தனியாகப் பிரயாணம் செய்வதையோ ரயில் பெட்டியின் கதவைத் திறந்து விடுவதையோ தவிர்த்துக் கொள்ளும்படி பிரான்ஸ் அரசு உல்லாசப் பயணிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## டொயாட்டோவுக்கு முதலிடம்

தற்போது அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் ஜப்பானியக்கார்களையே விரும்பிப் பாவித்து வருகின்றனர் இதனால் போர்ட் கார் நிறுவனத்துக்கு 1. 2 மில்லியன் டொலரும் ஜகுவார் கார் நிறுவனத்துக்கு 2. 5 மில்லியன் டொலரும் கடந்த ஆண்டு நஷ்டம் ஏற்பட்டுள்ளது

அமெரிக்க கார் பாவனையாளர்களிடையே எடுக்கப்பட்ட பேட்டியில் பெரும்பாலானோர் முதலாவதாக டொயாட்டோவையும் இரண்டாவதாக ஹொண்டாவையும் மூன்றாவதாக நிசான் காரையும் விரும்புவதாக கூறியுள்ளனர். பிரிட்டன் கடந்த ஆண்டு 810 பில்லியன் டொலரை கார் உற்பத்தி வீழ்ச்சியின் மூலம் இழந்துள்ளது (22)

● இளம்வயதினருக்கு அனுமதியில்லை ● பாஸ் பெற அலைச்சல் ● பொருள்களும் கட்டுப்பாடு

# மன்னாரிலிருந்து வெளியேற இராணுவம் கடும் கட்டுப்பாடு!

மன்னார்த்தீவில் வசிப்போர் பிற இடங்களுக்குச் செல்வதற்கு இராணுவம் பலத்த கட்டுப்பாட்டை விதித்துள்ளது. குறிப்பிட்ட வயதினர் தீவில் இருந்து வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது தீவில் இருந்து வெளியேறுவதற்கு மன்னார் நகரக் கொமாண்டரிடம் பாஸ் பெற வேண்டும் எனவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

'பாஸ்' பெறுவதற்குக் காலையில் இருந்து வெயிலில் காய்ந்து முகாமுக்குள் செல்ல வேண்டும். உள் செல்வதற்கான அனுமதி அங்கு பெற்றதும் கியூவில் நின்று ஒவ்வொருவராய்ச் சென்று நகரக் கொமாண்டரிடம் அனுமதி பெறவேண்டும். இதற்கு மணிக்கணக்கில் காத்து நிற்க வேண்டி உள்ளது.

பாஸைப் பெறுவதற்கு ஆறு படிவங்களில் நிரப்ப வேண்டும் நிரப்பப்பட்ட ஆறு படிவங்களும் அவ்வப் பகுதிக் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இப்படிவங்கள் நகரக் கொமாண்டரிடம் பின்னர் காண்பிக்கப்படும் படிவங்கள் காண்பிக்கப்படும் பொழுதே நேரடியாகப் பயணம் செய்யவுள்ளவர் விசாரிக்கப்படுவார்.

எடுத்துச் செல்லப்படும் பொருள்களின் விவரம் நுணுக்கமாக ஆராயப்பட்டு அளவு குறைக்கப்படும் (17)

## மெய்கண்டார் குருபூசை

மெய்கண்ட தேவரின் குருபூசை இன்று புதன்கிழமை பிற்பகல் சைவசித்தாந்தப் பேரவையின் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளின் பிரார்த்தனை உரையும், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ மகாலிங்கம், பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன.

## 550 இடம் பெயர்ந்த மாணவர்க்கு நாவற்குழியில் விசேட போதனை

தீவகத்திலிருந்து நாவற்குழிப்பகுதியில் இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை கொத்தணி அதிபர் கு. இரத்தினராசா தெரிவித்தார்.

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் பி.ப.5 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.

தீவகத்தில் இருந்து சுமார் 450 மாணவர்களும் ஏனைய பகுதிகளிலிருந்து சுமார் 100 மாணவர்களுமாக மொத்தம் 550 க்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர்.

இவர்களுக்கான வகுப்புக்களை நடாத்துவதற்கு வேலணைக் கொத்தணிப் பாடசாலைகளிலிருந்து ஐந்து ஆசிரியர்களும் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகளிலிருந்து பதினைந்து ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (15)

## மூன்று நிறுவனங்களில் இன்று தொழிற் பயிற்சி ஆரம்பம்

மரவேலை, கட்டிடவேலை ஆகியவற்றுக்கான பயிற்சி நெறிகள் பத்திரிசியார் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரி, ஊர்காவற்றுறைஇளையானூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவற்றில் இன்று ஆரம்பமாகிறது.

இந்தப் பயிற்சி நெறிகள் இரண்டரை மாதங்கள் நடைபெறும் எனவும் 70 பேர் வரையில் பயிற்சி பெறவுள்ளனர் எனவும் கெயர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (04)

★ பல்லவராயன்கட்டு - வன்னேரி - கிளிநொச்சிவழியாக

# மன்னார் - யாழ் பயண தூரம் 75 மைலால் அதிகரிப்பு!

மன்னாரில் கடமையாற்றும் யாழ் ஊழியர்கள் சோதனை மேல் சோதனையை அநுபவித்து வருகிறார்கள். சங்குப்பிட்டியில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் இவர்களின் சைக்கிள் பயணம்மேலும் பல மைல்கள் நீண்டுள்ளது.

விடத்தல்தீவில் இருந்து முழங்காவில், பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவு ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் சைக்கிள் பயணம் செய்த இவர்கள் தற்போது சுமார் 75மைல்கள் சுற்றியே யாழ்ப்பாணம் வரவேண்டி உள்ளது.

பல்லவராயன் கட்டில் இருந்து ஜெயபுரம். வன்னேரிக்குளம், அக்கராயன், கோணாவில், முறிப்பு, கனகபுரம் ஊடாகக் கிளிநொச்சியை அடைந்து அங்கிருந்து பரந்தன் சந்தி ஊடாக முரசுமோட்டை ஊரியான் அல்லது கொம்படி வெளி ஊடாக இயக்கச்சிச்சந்தியை அடைந்து பயணம்தொடர்கிறது.

### சோதனைச் சாவடி இடமாற்றம்

மன்னார்த்தீவு பள்ளிமுனையில் இயங்கி வந்த பயணிகள் சோதனைச் சாவடி தற்போது கறிச்சட்டிப் பாலத்திற்கு அருகில் இடம் மாற்றப்பட்டுள்ளது. இதனருகே கடற்படை முகாம் உண்டு. ஆரம்பத்தில் கடற்படை சோதனையை நடத்தியது. தற்போது இராணுவம் பொலிஸார் சோதனையை நடத்துகிறார்கள்

மன்னார்த் தீவில் இருந்து வெளியேறும் பயணிகள் இங்கு கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

அதேபோல் தீவுக்கு உள் வரும் பயணிகளுக்கும் சோதனை நடைபெறுகிறது.

### சீ. டபிள்யூ. ஈ. திறப்பு

மன்னார் நகரில் சீ.டபிள்யூ. ஈ. ஸ்தாபனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு பொருள்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிகிறது.

### ஊழியர்க்கு 'உ' காட்

மன்னார்த் தீவில் உள்ள அரச ஊழியர்களுக்கு மன்னார் நகர உதவி அரசாங்க அதிபரினால் 'உ' உலர் உணவுக் காட் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு கடமை புரியும் வெளி மாவட்ட அரச ஊழியர்களுக்கும் இக்காட் வழங்கப்பட்டுள்ளது.

இக்காட் மூலம் மா, அரிசி, சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

### மன்னாரிலும் வதந்தி

மன்னாரில் கடமையாற்றும் யாழ் ஊழியர்கள் யாழ் குடாநாடு பற்றி அங்கு அடிக்கடி பரப்பப்படும் தவறான வதந்திகளால் மனம் உடைந்து காணப்படுகின்றனர்.

குறிப்பாக வடமராட்சிப் பகுதியிலும் மந்திகையிலும், நாவற்குழி, அரியாலைப் பகுதியிலும் இராணுவம் தரை இறங்கியதாக மன்னாரிலும் வதந்திகள் பரப்பபட்டன.

### அரச ஊழியர்க்கு படகுச் சேவை

மன்னார்க் கச்சேரி, அரச ஊழியர்களுக்கான சிறப்புப் படகுச்சேவை ஒன்றை நடத்தி வருகிறது. மன்னார்க் கறிச்சட்டிப் பாலத்தில் இருந்து விடத்தல்தீவு வரையிலான 14 மைல்கள் கடற் தூரத்திற்கு இப் படகுச்சேவை நடைபெற்று வருகிறது

குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இச்சேவைக்கு ஊழியர்களிடம் இருந்து ரூபா 50 அறவிடப்படுகிறது.

வெளி மோட்டார் பூட்டிய இப் பிளாஸ்ரிக் படகு சுமார் $2\frac{1}{2}$ மணித்தியாலத்தில் விடத்தல் தீவை அடைகிறது இதில் பயணம் செய்பவர்கள் அரச அதிபர், இராணுவத்தினரின் அனுமதியைப் பெற வேண்டும். (17)

## கொழும்பு விடுதியில் கொள்ளை முயற்சி; பிடிபட்டோரில் மூவர் தமிழர்

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள விடுதி ஒன்றில் கொள்ளையிட முயன்ற கோஷ்டியொன்று விடுதியிலிருந்தவர்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் சிங்களவர், ஏனைய மூவரும் தமிழர்கள். இவர்கள் ரிவால்வர் ஒன்றையும் வைத்திருந்தனர்.

விடுதியிலிருந்தவர்கள் தாக்கியதில் இவர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெயலலிதாவுக்கு அச்சுறுத்தலாம்

தமிழகமுதல்வர் செல்விஜெயலலிதாவுக்கு விடுதலைப் புலிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனராம்.

இப்படி தமிழகப் பத்திரிகைகளை ஆதாரம் காட்டி 'லங்கா புவத்' தெரிவித்துள்ளது.

தமிழக மக்களுக்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையேயான உறவுகளைத் துண்டிக்க அவர் முயன்றால் எதிர் நடவடிக்கையெடுக்கப்படுமென இந்த மிரட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் 'லங்காபுவத்' தெரிவித்திருக்கிறது.

● சுசியம், பாயாசம், முறுக்கு, அரியதரம்...

## தமிழர்களின் சிற்றுண்டிகளுக்கு சுவிஸில் பெரும் கிராக்கி!

தமிழர்களால் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளை சுவிஸ் மக்கள் சுவைத்து விரும்பி உண்ட காட்சியை சில தினங்களுக்கு முன்னர் சுவிஸில் நடைபெற்ற பருவ காலச் சந்தையில் காண முடிந்தது.

சிலிரன் நகரில் நடைபெற்ற இச்சந்தையில், இறைச்சி வகைகள், ஆடம்பரப் பொருள்கள். பழவகைகள். பூவகைகள், காய்கறி வகைகள், பழரசங்கள், மதுபானங்கள் என பலவகையான விற்பனைச்சாலைகள் மைதானத்தில் நிறைந்து காணப்பட்டன. இவை அனைத்தும் 'சுவிஸ்' பிரஜைகளினால் நடாத்தப்பட்டவை.

அவற்றின் மத்தியில் இலங்கைத் தமிழர்களால் தயாரிக்கப்பட்ட சுசியம், பாயாசம், முறுக்கு, அரியதரம். பயித்தம் உருண்டை, லட்டு, கடலை, மில்க்டொபி போன்ற சிற்றுண்டிகளுடன் தேநீரும் விற்பனைச்சாலையொன்றில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைத் தமிழர்களின் சிற்றுண்டிகளை சுவிஸ் குழந்தைகள் முதல் முதியோர் வரை விரும்பி உண்டனர். இலங்கைப் பாயாசத்துக்கு 'புடிங்' என அங்கு அவர்கள் பெயர் வைத்தும் விட்டனர்.

# 1200 இலங்கைத் தமிழர்கள் தமிழகத் தடுப்பு முகாம்களில்!

தமிழ்நாட்டில் சந்தேகத்தின் பேரில் இதுவரை 1200 இலங்கைத்தமிழர்கள் கைது செய்யப்பட்டு சேலம், வேலூர், செங்கல்ப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தமிழக காவற்துறையின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மாநிலத்தில் தற்பொழுது ஒரு லட்சத்து இருபதினாயிரம் இலங்கைத் தமிழர்கள் முகாம்களில் தங்கியுள்ளதாகவும் இவர்களைத்தவிர மேலும் 3000பேர் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அக்குறிப்பு தெரிவிக்கின்றது.

முகாம்களுக்குவெளியேயுள்ளோரில்28ஆயிரம் பேர் காவல்நிலையங்களில் பதிவுசெய்துள்ளனர் -பதிவு செய்யாத500இலங்கைத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தொடர்கிறது அக்குறிப்பு

## நேரம் தப்பிய பேச்சு கருகிய தோசையே!

தருந்த தருணத்தில் தோசையைத் தட்டிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். தவறினால் பருவம் தவறிய அத்தோசை சாப்பிட உகந்ததாய் இருக்காது-பயனற்றுப் போய்விடும். இதைத் தோசை சுடும் பெண் தெரிந்து கொள்ள வேண்டும்.

அரசியலும் அப்படித்தான் - சமாதானப் பேச்சும் உரிய நேரத்தில் நடைபெற வேண்டும். தவறின் அது பயனற்றுப் போய்விடும்.

இப்படிக் கூறியிருப்பவர் அமைச்சர் தொண்டமான் தான் - 'த ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில். (16)

## தனியார் கடைகளிலும் முத்திரைக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத் தபாலகங்களில் முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அனேக உப தபாலகங்களில் ஒரு ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட முத்திரைகள் தட்டுப்பாடாக உள்ளன

மேலும் தனியார் கடைகளில் கூட முத்திரைகள் தட்டுப்பாடாகவே உள்ளன (15)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

மானிப்பாயில் கல்வி கற்ற ''கெல்ற்'' மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்ச்சியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சி. கேசவராஜன் சிறப்புரையாற்றினார், உப- அதிபர் ராமதிலகம் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்

## வருமானத்தின் பெரும் பங்கு தேவையற்ற யுத்தத்திற்காக!

நாட்டின் வருமானத்தின் பெரும் பணம் பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு தேவையற்ற யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு கல்முனையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் தெரிவித்தார்.

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேவையற்ற யுத்தம் சரியான தீர்வின் மூலம் நிறுத்தப்படல் வேண்டுமெனவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

## 3750 யாழ் விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கைப் பயிற்சி!

கரவெட்டி, உடுப்பிட்டி, அளவெட்டி, பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த 3750 விவசாயிகளுக்கு நெற் செய்கை பயிற்சி வகுப்புக்கள கெயர் நிறுவனத்தினால நடாத்தி முடிக்கப்பட்டு விதை நெல் வழங்கப்பட்டு விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களுக்கான உரம் இங்கு வந்து சேர்ந்ததும் வழங்கப்படவுள்ளதாகவும் தற்போது இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மண்வெட்டி வழங்கப்படவுள்ளதாகவும் கெயர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (04)

## வவுனியாவுக்கு 5 பஸ்வண்டிகள்

வவுனியா டிப்போவுக்கு 5 பஸ் வண்டிகள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இப்பஸ்வண்டிகள் வவுனியா நகர்ப் புறச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

## அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி வவுனியாவுக்கு திடீர் விஜயம்!

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரியான கேர்ணல் வோன்கே மார்ட்டின் கடந்த வியாழக்கிழமை வவுனியாவுக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரின் வவுனியா விஜயத்துக்கான காரணமெதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இவர் வவுனியாவில் இராணுவ; பொலிஸ் உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதாகவும், தாண்டிக்குளம் தடைமுகாம் மற்றும் கொக்குவெளிப் பகுதிகளுக்குப் படை அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

● ஜனசவிய உதவியை வழங்கத் தவறியமைக்காக

# அமைச்சர்மல்லிமாராச்சிக்குஎதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப பிரேரணை ஒன்றைக் கொண்டுவர சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனசவிய உதவி பெற்றவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவை இன்னமும் வங்கியில் வைப்புச் செய்யவில்லை என்பதை முன்வைத்தே இப்பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது பிரேரணை இப்பொழுது தயாரிக்கப்பட்டுவருவதாகச் சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

வானொலி, ரூபவாஹினி போன்றவை அரசின் பிரசார வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதைக் கண்டித்துத் தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே ரணசிங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர சுதந்திரக்கட்சி ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

## சென்ஜோன்ஸ் ஸ்ரான்லிமோதல்

யாழ் சென்ஜோன்ஸ கல்லூரிக்கும், ஸரான்லிக் கல்லூரிக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சினேகபூர்வமான உதைப்பந்தாட்டப் போட்டியில் சென்ஜோன்ஸ் 'ஏ' பிரிவு அணி இரண்டுக்குப் பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

'பி' பிரிவு அணி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது, 'சி' பிரிவு ஆட்டத்தில் சென்ஜோன்ஸ அணி இரண்டுக்குப் பூச்சியம் என்ற கோல்கள் கணககில் வெற்றியீட்டியது. (16)

## தமிழ் வர்த்தகரைக் கடத்திய இரு இராணுவ அதிகாரிகள் கைது

இரத்தினக்கல் வியாபாரியான சௌந்தரராஜன் என்பவரைக் கடத்திச் சென்று தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பனாகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த இரு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கார் கொள்வனவு சம்பந்தமாக குறித்த தமிழ் வர்த்தகருக்கும் மற்றொரு சிங்கள இரத்தினக்கல் வர்த்தகருக்குமிடையே தகராறு ஏற்பட்டதாகவும் அதன் பின்னர் சிங்கள வர்த்தகரின் ஏற்பாட்டில் இந்த இராணுவ அதிகாரிகள் இருவரும் சௌந்தரராஜனைக் கடத்திச் சென்று தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

தாக்குதலுக்கு உள்ளான தமிழ் வர்த்தகர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

## ஷார்ஜா கிரிக்கெற் போட்டியில் பாக். அணிக்குச் சலுகை!

ஷார்ஜாவில் இடம்பெற்ற கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் பாகிஸ்தானுக்குச் சலுகை காட்டப்பட்டதாக இந்திய கிரிக்கெற் அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கிந்தியக் கோஷ்டி பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் முடிவுகளைச் செல்லுபடியற்றதாக்கும்படி தாம் சர்வதேசக் கிரிக்கெற் சபையைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுப் போட்டியை ஒழுங்கு செய்தவர்கள் பாகிஸ்தான் இரு தடவை தோல்வியுற்றபோதிலும் அதை இறுதி ஆட்டத்தில் தகுதி பெறச் செய்வதற்காக விதிகளை மீறியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

✶ சுற்றுப்போட்டியின் இடையில் மூன்று ஆட்டக்காரர்களை மாற்ற அனுமதித்தது.

✶ இறுதி ஆட்டத்தில் தகுதி பெற பாகிஸ்தானுக்கு 199 ரன்கள் தேவைப்பட்டபோது ஓவர்களைக் குறைக்கும் விதிகளை அனுசரிக்கத் தவறியது-இதன் மூலம் மேற்கிந்தியக் கோஷ்டி பாதிக்கப்பட்டது.

★ பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் போட்டியில் மங்கிய வெளிச்சத்தில் இந்தியாவைத் துடுப்பெடுத்தாடச் செய்தது என்பன அவரின் குற்றச்சாட்டுக்களாகும். 22,16

## திருமலை நோக்கிச்செல்லும் 'குமண' சில தினங்களில் திரும்பி வரும்

பருத்தித் துறையிலிருந்து புறப்பட்டுச் சென்ற 'குமண' கப்பல் அடுத்த சில தினங்களில் மீண்டும் பருத்தித்துறை வரவுள்ளது.

இக்கப்பல் தற்பொழுது திருமலைத் துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அங்கு குறிப்பிட்ட சில தொன் கோதுமை மாவினையும், கொழும்பிலிருந்து வாகனங்கள் மூலம் வந்து தங்கியிருக்கும் சுகமடைந்து வரும் வடபகுதி நோயாளர்களையும் ஏற்றிக் கொண்டு சில தினங்களில் மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பிற்கான அவசர நோயாளர்களை ஏற்றிக் கொண்டு இக்கப்பல் மீண்டும் புறப்படும். (07)

## சுவிஸ் கோடை காலச் சந்தையில் வட-கிழக்கு நிலைவரம் பற்றிய செய்திச்சேவை!

இலங்கையின் வடக்குக் கிழக்கு நிலவரம் தொடர்பாக ஆங்கிலம், ஜேர்மன் மொழி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் நறுக்குகள் அண்மையில் சுவிஸில் நடைபெற்ற கோடைக்காலச் சந்தையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன

இந்த பத்திரிகை நறுக்குகளில் இருந்து தகவல்களைச் சேகரிப்பதில் சுவிஸ் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்கள் அங்கு சந்தையில் காணப்பட்ட இலங்கைத்தமிழர்களிடமிருந்து வடக்கு கிழக்கு நிலவரம் பற்றி மேலதிகத் தகவல்களையும் சேகரித்துக்கொண்டனர்.

இச் சந்தையின் மூலம் இலங்கையின் வடக்கு. கிழக்கு நிலைவரம் பற்றிய பல தகவல்களை சுவிஸ மக்களால் சேகரிக்க முடிந்ததாக சுவிஸ் கன்டோனில் வெளியாகும் நாளிதழ் ஒன்று பாராட்டியுள்ளது.

## கடனுக்குப் பொருள் பெறும்வசதி சகலருக்கும் கிடைக்கும்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிராமிய வங்கியில் கணக்கு இல்லாதவர்களும் கடனுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது

ஒருவர் 500 ரூபா கிராமிய வங்கியில் செலுத்தி ஒரு கூட்டுறவுக் கிளையும் அவரை சிபார்சு செய்யுமானால் 750/= ரூபாவுக்கு மேற்படாத பொருள்களை நல்லூர் சங்கக் கிளையிலிருந்து கடனாக அவர் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுமக்களின் வசதி கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் ப நோ.கூ.ச. தலைவர் கனக சபாபதி தெரிவித்தார். (41

# கப்பல் மூலம் உணவு; அரசின் செயல் அன்பினாலல்ல

## - வாஞ்சிநாதன்

''தெற்கிலிருந்து வடபகுதிக்குக் கப்பல் மூலம் உணவுப் பொருள்களை ஸ்ரீலங்கா அரசு அனுப்பிக் கொண்டிருப்பதற்குக் காரணம் பொது மக்கள் மீது கொண்ட அன்பினாலோ அல்லது மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கக் கூடாது என்பதற்காகவோ அல்ல''

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கிராமிய உற்பத்திக் குழுக்களின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசுகையில் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரதிப்பொறுப்பாளர் கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன் கூறினார். மேற்கண்டவாறு பொருள்கள் அனுப்பப்படுவது சர்வதேச நாடுகள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது தமிழன் முன்னேறக் கூடாது என்பதே அரசின் உள் நோக்கம் என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும்'' என்றும் அவர் சொன்னார்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் மாவட்டப் பொறுப்பாளர் திரு. கௌரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், 'நாடு விடுதலை அடைய ஆயுதப் போராட்டமும், கலாசார மேம்பாடும் மட்டும் போதுமானதல்ல, சமகாலத்திலேயே பொருளாதாரத்துறையிலும் நாம் வளர்ச்சியடைய வேண்டும் அப்போது தான் நாம் மற்றவனின் தயவை எதிர்பாராமல் வாழக் கூடியதாகவிருக்கும்' என்றார் 25

## திருட்டு உடுப்புகள் பிடிபட்டன

கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள சலவைத் தொழிற்சாலை ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் திருடப்பட்ட உடுப்புக்கள் கல்வியங்காட்டு சந்தைப்பகுதியில் விற்கப்பட்டபோது கையும்மெய்யுமாகப் பிடிபட்டன.

இவற்றை விற்றவர்கள் விடுதலைப் புலிகளிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 07

### பொருளாதார...

வில்லை எனினும் சமாதானப் பேச்சுகளுக்கு முன்னோடியாக ஒரு அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆயினும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு நல்லெண்ண சூழ்நிலைக்கு ஒத்திசைவானதாக அமையவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இரு முனைகளில், ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பாரிய அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது. ஒருபுறம், தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்திக் கொண்டு, மறுபுறம் பொருளாதார நெருக்குதலையும் தீவிரப்படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப்பழுவை சுமத்தி வருகிறது. இவ்விதமான இராணுவ - பொருளாதார நெருக்குதல் நிலை சமாதான அணுகுமுறைக்கு பாதகமாகவே அமையும். ஏனென்றால், இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதான ஒரு அழுத்தமாக திணிக்கப்படுவதால் இச் சூழலில் சமத்துவமான, சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடினம்.

தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தரமான தீர்வைக்காண அரசு தரப்பில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்த இராணுவ - பொருளாதார அழுத்த அணுகுமுறை கைவிடப்படவேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை தோற்றுவிக்கும் வகையில் ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒரு சமரஸ சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதை நாம் உங்களுக்கு விளக்கிக்கூறத் தேவையில்லை. இதற்கு மாறாக, தமிழ் மண்ணில் இராணுவ மேலாதிக்கத்தை திணித்து, பொருளாதாரத் தடைகளை இறுக்கி, தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் வரித்த வரையறைக்குள், தான் விதித்த நிபந்தனைக்குள் பிரச்சினையைத் தீர்க்கலாமென அரசு சிந்திக்குமானால், அது மாபெரும் அரசியல் தவறாகவே முடியும். இத்தகைய அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

யாழ்ப்பாணத்திற்கு உங்களை வருமாறு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். கடிதங்கள் மூலம் கருத்துப்பரிமாற்றங்கள் வைத்துக் கொள்வதைவிட நேரடியாகச் சந்தித்துப் பேசினால் எமது நிலைப்பாட்டை நீங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியுமென நாம் எண்ணினோம். அத்தோடு, எமது மக்களது கருத்துக்களை கேட்டறியவும் அவர்கள் எதிர்கொள்ளும் மோசமான வாழ்க்கை நிலையை நேரில் கண்டறியவும் இந்த விஜயம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்திருக்கும். ஆனால் நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு வேறு விதமாக இருக்கிறது. அதாவது ஒரு பொதுவான மூலத் திட்டத்தில் முதலில் இணக்கம் கண்டு அதன் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாகவேண்டும் எனக் கருதுகிறீர்கள். இது குறித்து சில யோசனைகளையும் முன்வைத்து அதற்கு எமது கருத்துக்களையும் கேட்கிறீர்கள்.

எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அரசின் அனுசரணை அற்றது என்பதை குறிப்பிடும் நீங்கள் இந்தக் கருத்துக்கள் முற்று முழுதாக இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் சார்பானது என்பதை வலியுறுத்துகிறீர்கள். இது எமக்கு ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் முன்வைத்த கருத்துகளுக்கு ஆளும் கட்சியினதோ அல்லது சிங்கள எதிர்க்கட்சிகளினதோ ஒப்புதல் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், இந்த யோசனைகள் பற்றி நாம் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வது விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் மத்தியில் நிகழும் பேச்சுக்களாகவே கருதப்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான, வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை பற்றி எமது முழுமையான விமர்சனத்தை தெரிந்து கொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சிகளதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளது என்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா?.

உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினையின் சில அடிப்படை அம்சங்களை (குறிப்பாக, நிலவுரிமை, குடியேற்றம், பாதுகாப்பு, பிரதேச அபிவிருத்தி) தொட்டு நிற்பினும் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பினை கொண்டதாகஇல்லை. இந்திய - இலங்கை உடன்பாட்டில் பிரேரிக்கப்பட்டு, பதின் மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தத்தால் சட்டவாக்கம் பெற்ற பழைய மாகாணசபை திட்ட வரையறைக்குள் இந்த யோசனைகள் உட்படுத்தப்பட்டது போலத் தெரிகிறது.

மாகாணசபைத்திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை எல்லாம் இங்கு பிட்டுக்காட்டுவது அவசியமல்ல. இது நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி கண்ட ஒரு தீர்வுத் திட்டம் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல. சிங்களப் பெரும்பான்மையினரின் அபிலாசைகளை மட்டும் பேணிப்பாதுகாக்கும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் மத்திய அரசிடம் அனைத்து ஆட்சியதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கும்போது, பிரதேச ரீதியில் உருப்படியான சுயாட்சித் திட்டம் எதையும் உருவாக்குவது சாத்தியமல்ல என்பதே எமது கருத்து. நீண்டகால வரலாற்று அனுபவம் இந்த அரசியல் உண்மையை எடுத்தியம்புகிறது. இந்தியத் தலையீடும் இந்த வரலாற்று அனுபவத்தையே கற்றுக் கொண்டது.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட நாம் உறுதியோடு, ஆயுதமேந்திப் போராடி வருகிறோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆயினும் எமது போராட்டப் பாதையில் சமாதான அணுகுமுறைகளைநாம்ஒருபொழுதும்நிராகரித்ததில்லை. தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் நாம் அதனைபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். இந்தக் கருத்தை நாம் பல தடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம். இப்படியான ஒரு நியாயமான, நாகரிக உலகம் ஏற்றுக்கொள்ளும் முற்போக்கான தீர்வுத் திட்டங்களை சிங்கள அரசியல் வாதிகள் சாதகமாக கருததில் எடுத்துக்கொள்வார்களாஎன்பதும் சந்தேகமே.

இந்தக் கடிதத்தில் எமது நிலைப்பாட்டினை மிகவும் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். உங்களது சமாதான முயற்சிக்கு இது பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம்.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள.
ஒப்பம்
(கோ. மகேந்திரராசா)
தலைவர்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

---

## "பச்சை வட்ட கருமாதிபீடம்"

(Green Circle Board)

## பொருத்துனர் சேவை நிலையம்

★ விவாகப் பொருத்துனர் சமாஜம் தொடங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற வசதியுள்ள இச் சமாஜத்தில சேர விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

★ உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பல்வேறு தரப்பட்ட தொழில் புரிவோரினதும் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு தகுந்த தேர்வு செய்ய உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

★ ஆதனங்கள் விற்பதற்கும், வாங்குவதற்கும் எம்மை நாடுங்கள் உங்களுக்குச் சாதகமான முறையில் நாம் ஒப்பேற்றித் தருவோம்.

நம்பிக்கையுடன் எம்மை நாடுங்கள்

தொடர்பு:

எஸ். ஏ. தர்மலிங்கம்,
24, புறாடி லேன்,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

11009

---

### சூளுரைக்கிறார் காமினி

# சிறை செல்ல நேர்ந்தாலும் சிந்தை கலங்க மாட்டேன்

''சிறைக்குச் சென்றாலும் சிறையிலிருந்து வந்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவேன் இன்று உலக நாடுகளில் எத்தனையோ பேர் சிறையில் இருந்து வந்துகூட ஜனாதிபதியாகியுள்ளனர்.''

இவ்வாறு முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து என்னை வெளியேற்றினாலும் நான் அதிலிருந்து வெளியேற மாட்டேன்.

நான்சிறையில் இருந்தாலும் எனது மகனை எனக்காக நீதிமன்றத்தில் வழக்குப் பேசத் தயார் படுத்தியுள்ளேன்.'' என்றும் சொன்னார். (08)

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

கொம்படி ஊரியான் பகுதிகளை நோக்கி ஆனையிறவு இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு தொடர்ச்சியாக பல ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சேதவிவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை 07

### குடும்பங்களுக்கான...

கிலோ ரூபா 40/- என்ற அடிப்படையில் உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்/ மொத்த விற்பனைக் களஞ்சியம் பொற்பதி வீதிச் சந்தி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்பவற்றில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் உச்சமாக 2கிலோ கொடுக்கப்படும்.

## எண்ணெய்க்கிணறுகள் அணைந்தன

குவைத்தில் ஈராக்கினால் தீவைக்கப்பட்ட அனைத்து 732 எண்ணெய்க்கிணறுகளும் அணைக்கப்பட்டு விட்டன. 7 மாதங்கள் பிடித்த இத்தீ அணைப்பு நடவடிக்கைக்கு 100 கோடி டொலர் செலவாகியுள்ளது அமெரிக்க கனடிய கம்பனிகளின் தலைமையில் பத்தாயிரம் பேர் இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### மலையக...

தாமே குண்டு வீசி விளம்பரம் தேடுகின்றனர் என்கிறது கொழும்பு அரச பத்திரிகை.

இச்சம்பவத்திற்கு அரச படையை குற்றம் சொல்லவில்லை அரசினால் அமர்த்தப்பட்ட குண்டர் படையே இதற்கு காரணம் என காமினி திஸநாயக்கா குறிப்பிட்டுள்ளார்

## அரச ஊழியர்கள் கூட்டம்

வடமராட்சிப்பிரிவினைச் சேர்ந்த இலங்கை வங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றில் பணிபுரியும் அதிகாரிகள் ஊழியர்கள் அரசாங்க திணைக்கள அதிகாரிகள் ஊழியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை 7 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### இரு...

அப்பகுதியில் மீனவர்களால் போடப்பட்டிருந்த ''களங்கட்டி'' களில் இருந்து மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தி வருவதாக தெரியவந்துள்ளது.

மண்டைதீவில் இருந்து சிலதினங்களுக்கு முன் தப்பி வந்த செபஸ்தியாம்பிள்ளை என்ற 68வயதான முதியவர் மூலம் இத்தகவல் வெளியாகியுள்ளது

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளவர்கள். சில்வஸ்ரர், சுந்தர் ஆகிய வாலிபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (16)

### சார்க்...

கூறியது

இந்த இழுபறி நிலையில் மாநாடு திட்டமிட்டபடிநிகழ்வது சந்தேகமாக உள்ளது என்பதால் இந்தியப் பிரதமர் திரு. பி வி நரசிம்மராவும் தனது கொழும்பு விஜயத்தைக் கைவிடக் கூடும் என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது,

இதேவேளை இச்சிக்கல் நிலையால் நேற்றுக் கூடிய சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது எனினும் பின்னர் உத்தியோகபூர்வமற்ற ரீதியில் மாநாடு கூடியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

#### விதிமுறை

சார்க் அமைப்பின் விதிமுறைப்படி உறுப்பு நாடுகளில ஒன்று கூட பங்குபற்றாவிடின் உச்சிமாநாட்டில் எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்பட முடியாது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### விவசாயிகளுக்கு...

சாயிகளாகப் பதிவு செய்து கொண்ட விவசாயிகளுக்கே இந்த உரவகைகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 18

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 06.11.91 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.